நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : STC/46 /2025

வழக்கு சாட்சி : PW.3 (LW.3)

| | | |
|---|---|---|
| பெயர் | : | தனபால் |
| தந்தை பெயர் | : | மாரிமுத்து |
| கிராமம் | : | ஆலத்தூர் |
| வயது | : | 63 / 2025 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of 17.**11.2025**

(<u>எதிரிகள் 1 முதல் 4 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.</u> )

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 2 மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நான் எங்கள் ஊர் பஞ்சாயத்து தலைவர் என்பதால் மேற்படி நபர்களை எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் தினத்தன்று நான் வேலைக்கு சென்று விட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை

**<u>நீதிமன்ற விசாரணை</u>**

கடந்த 16.09.2024 அன்று மதியம் 3.30 மணியளவிலட நானும் அ.சா. 2–ம் எங்கள் ஊர் வாட்டர் டேங்க் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தாகவும் அப்போது எதிரி சிரஞ்சீவி மற்றும் பீமராவ் என்ற நபர் குடிபோதையில் சத்தம் போட்டுக்கொண்டிருந்ததாகவும் அதை கேட்க வந்த அ.சா. 1 ஐ எதிரி சிரஞ்சீவி அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கையால் அடிதத்தார் என்றும் அதை சமாதானம் செய்ய வந்த அ.சா.1 அப்பா கண்ணன் மற்றும் அ.சா.1 ஐ எதிரிகள் அசிங்கமாக திட்டி கையாலும் கம்பாலும் அடித்தார்கள் என்றும் மிரட்டினார்கள் என்றும் மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்தாக போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

இல்லை.

AISHWARYA R

Digitally signed by AISHWARYA R
Date: 2025.11.17 17:21:24 +0530

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : STC/46 /2025

வழக்கு சாட்சி : PW.2 (LW.2)

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜோஷி |
| தந்தை பெயர் | : | மாரியப்பன் |
| கிராமம் | : | ஆலத்தூர் |
| வயது | : | 36 / 2025 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of 17.**11.2025**

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. )

**முதல் விசாரணை:**

நான் தற்போது கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சம்பவம் நடந்ததாக கூறப்படும் தினத்தன்று நான் வேலைக்கு சென்று விட்டேன். போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை

**நீதிமன்ற விசாரணை**

கடந்த 16.09.2024 அன்று மதியம் 3.30 மணியளவிலட நானும் தனபாலும் எங்கள் ஊர் வாட்டர் டேங்க் அருகே நின்று பேசிக்கொண்டிருந்தாகவும் அப்போது எதிரி சிரஞ்சீவி மற்றும் பீமராவ் என்ற நபர் குடிபோதையில் சத்தம் போட்டுக்கொண்டிருந்ததாகவும் அதை கேட்க வந்த அ.சா. 1 ஐ எதிரி சிரஞ்சீவி அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கையால் அடிதத்தார் என்றும் அதை சமாதானம் செய்ய வந்த அ.சா.1 அப்பா கண்ணன் மற்றும் அ.சா.1 ஐ எதிரிகள் அசிங்கமாக திட்டி கையாலும் கம்பாலும் அடித்தார்கள் என்றும் மிரட்டினார்கள் என்றும் மேற்படி சம்பவத்தை நேரில் பார்த்தாக போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் இல்லை.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

இல்லை.

AISHWARYA R

Digitally signed by AISHWARYA R
Date: 2025.11.17 17:21:32 +0530

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நாகப்பட்டினம்

வழக்கு எண் : STC/46 /2025

வழக்கு சாட்சி : PW.1 (LW.1)

| | | |
|---|---|---|
| பெயர் | : | கமலேஷ் |
| தந்தை பெயர் | : | கண்ணன் |
| கிராமம் | : | ஆலத்தூர் |
| வயது | : | 24 / 2025 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of 17.**11.2025**

(எதிரிகள் 1 முதல் 4 ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் முன்னிலை. )

**முதல் விசாரணை:**

நான் தற்போது JCB ஆப்ரேட்டராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அவர்கள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். ஆஜர் எதரிகளுக்கும் எனது தம்பி மனோஜ்ஜிற்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து எனது தந்தை திட்டச்சேரி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார். கடந்த 16.09.2024 அன்று மதியம் 3.30 மணியளவில் நான் வேலையை முடித்து விட்டு வீட்டுக்கு வந்தபோது எதிரி சிரஞ்சீவிக்கும் எங்கள் வீட்டு எதிர் வீட்டைச் சேர்ந்த பீமராவ் என்ற நபருக்கும் சண்டை நடந்து கொண்டிருந்தது. எங்கள் தெருவில் அவர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்ததால் நான் சென்று பார்த்தபோது எதிரி சிரஞ்சீவி உன்னை யார் வர சொன்னது குச்சிகாரி மகனே, தேவுடியா மகனே என்று அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டி, என்னை கம்பால் எனது தலையில் அடித்தார். எனதுஅப்பா கண்ணன் சத்தம்கேட்டு அங்கு வந்தார். எதிரி வீரதாஸ், சுர்யா, சிவபெருமாள் ஆகியோர் தடுக்க வந்த எனது அம்மா அப்பா, மற்றும் என்னையும் கம்பால் அடித்தார்கள். எதிரிகள் சிரஞ்சீவி மற்றும் சிவபெருமாள் என்னை பார்த்து இன்று தப்பித்துவிட்டாய் என்னைக்காவது இருந்தாலும் எங்ககிட்ட மாட்டுவாய் என்று மிரட்டினார்கள். பின்னர் திட்டச்சேரி காவல் நிலையம் சென்று சம்பவத்தை பற்றி புகார் கொடுத்தோம். அடிபட்டவுடன் நான் நாகப்பட்டினம் ஒரத்தூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலிசார் என்னை

மருத்துவமனைக்கு வந்து விசாரணை செய்தார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் என்னால் கொடுக்கப்பட்டதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

எனது முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளைதான் போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறினேன் என்றால் சரிதான். எதிரி சிரஞ்சீவிக்கும் எங்கள் எதிர் வீட்டை சேர்ந்த பீமாராவிற்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பீமாராவ் எதிரி சிரஞ்சீவி மீது நடந்ததாக சொல்லப்படும் பிரச்சனைக்காக ஏதேனும் புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. எனது புகார் வாக்குமூலத்தில் பீமாராவ் மதுபோதையில் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

பீமாராவ் மது போதையில் பிரச்சனை செய்துகொண்டிருந்தால் ஊர்க்காரர்கள் என்ற முறையில் எதிரிகள் சென்று கேட்டார்கள் என்றும் அதனால்தான் பீமாராவ் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, பீமாராவ் எனக்கு எதிர் வீடு என்பதால் நான் சென்று எதிரிகளிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டேன் என்றால் சரியல்ல. எங்கள் வீட்டிலிருந்து திட்டச்சேரி காவல் நிலையம் சுமார் 3 கி.மீ. இருக்கும் என்றால் சரிதான். நான் திட்டச்சேரி காவல் நிலையம் சென்று கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் இன்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் திட்டச்சேரி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன், பின்னர் நான் ஒரத்தூர் மருத்துவமனையில் இருக்கும்போது போலிசார் என்னை விசாரணை செய்து புகார் எழுதிக்கொண்டார்கள். நான் திட்டச்சேரி காவல் நிலையம் சென்றதாக வழக்கிற்காக கூறுகிறேன் என்றும் அவ்வாறு சென்றிருந்தால் எனது புகார் வாக்குமூலத்தில் அது தொடர்பாக குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

எங்கள் வீட்டிலிருந்து நாகப்பட்டினம் ஒரத்தூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை செல்வதற்கு சுமார் 45 நிமிடம் ஆகும் என்றால் சரிதான். சம்பவம் உண்மை என்றால் நான் சம்பவம் நடந்த உடனேயே மருத்துவமனைக்கு சென்றிருப்பேன் என்றும் ஆனால் காலதாமதமாக எதிரிகளை பழிவாங்கும் எண்ணத்தில் இரவு 7.10 மணிக்கு

மருத்துவமனை சென்றேன் என்றால் சரியல்ல, நான் திட்டச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் சென்று அங்கு கட்டுப்போடமுடியாது என்று கூறியதால் ஒரத்தூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். நான் திட்டச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் சென்ற விவரத்தை போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கூறினேனா என்றால் இல்லை. காலதாமதத்தை குறித்து கேட்டதால் திட்டச்சேரி ஆரம்ப சுகாதார நிலையம் சென்றதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நாகப்பட்டினம் ஒரத்தூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை மருத்துவர் என்னை விசாரணை செய்தபோது நான்கு தெரிந்த நபர்கள் என்னை தாக்கினார்கள் என்று கூறியுள்ளேன் அவர்களின் பெயர்களை கூறவில்லை என்றால் நான் கூறினேன் மருத்துவர்கள் எழுதிக்கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் என்னை தாக்கியதாக கூறப்படும் கட்டைகளை போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் சம்பவ இடத்திலேயே கிடந்தது. சம்பவம் உண்மையாக இருந்தால் நான் கட்டைகளையும் கம்புகளையும் போலிசாரிடம் ஒப்படைத்திருப்பேன் என்றால் நான் சம்பவம் நடந்த பிறகு நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன், அதனால் ஒப்படைக்கவில்லை. சம்பவம் எதுவும் நடைபெறாததால்தான் நான் கட்டைகளை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல.

குடிபோதையில் பீமராவ் என்னை தள்ளிவிட்டதால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றும் எதிரிகளுக்கும் எனது தம்பிக்கும் உள்ள முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகள் மீது இந்த பொய்யான வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னை மருத்துவமனையில் எந்த நிலை காவலர் விசாரணை செய்தார் என்று தெரியாது என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் எதிரிகள் என்னை திட்டவும் இல்லை, காயம் ஏற்படுத்தவும் இல்லை என்றால் சரியல்ல. பீமராவிற்கு ஆதவராகவும் எதிரிகள் மீது இருந்த முன்விரோதத்தினாலும் பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.